| | | | |
|---|---|---|---|
| Headline | Higher studies students cheated by agent | | |
| MediaTitle | Tamil Nesan (Sunday) | | |
| Date | 27 Jul 2014 | Language | Tamil |
| Circulation | 55,000 | Readership | 210,000 |
| Section | News | Color | Full Color |
| Page No | 12 | ArticleSize | 901 cm² |
| AdValue | RM 5,242 | PR Value | RM 15,727 |
| | | | |



## ஏஜெண்டால் ஏமாற்றப்பட்ட இந்திய மாணவர்கள் மருத்துவத் துறையில்

# உயர்கல்வியைத் தொடர முடியாமல் தவிப்பு!

(செய்தி: ந.சத்தியராஜா)

**கோலாலம்பூர், ஜூலை 27- இந்தோனேசியாவிலுள்ள சுமத்ரா உத்தாரா பல்கலைக்கழகத்தில் குறைந்த செலவில் மருத்துவத் துறையில் உயர்கல்வியை பயிலலாம் என ஏஜெண்டு அளித்த வாக்குறுதியை நம்பி அங்கு படிக்கச் சென்ற 9 இந்திய மாணவர்கள் தங்களின் இரண்டு தவணைகளை முடித்த நிலையில் அக்கல்வியைத் தொடர முடியாமல் தவிக்கின்றனர்.**



பாதிக்கப்பட்ட மாணவர்களுடன் திருவேங்கடம், எஸ்.இராமகிருஷ்ணன், மாணவர்களின் பெற்றோர்கள் முதலானோர் உள்ளனர்.

ஆரம்பத்தில் அப்பல்கலைக் கழகத்தில் ரிம 1 இலட்சத்து 65 ஆயிரம் வெள்ளியில் மருத்துவக் கல்வியைப் பயிலலாம் என அந்த ஏஜெண்டு நிறுவனம் வாக்குறுதி அளித்தது.

ஆனால், சம்பந்தப்பட்ட மாணவர்கள் இரண்டு தவணைகளை முடித்த நிலையில் ஏஜெண்டு சொன்ன தொகையை விட கூடுதல் தொகையில் (ஒரு இலட்சம் வெள்ளி) அக்கல்வியை மாணவர்கள் பயில வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் கூறினர்.

நேற்று தலைநகரிலுள்ள பிரபல தங்கும் விடுதியில் சமூக ஆர்வலர் ஏ.திருவேங்கடம் தலைமையில் ஒன்று திரண்ட பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் ஏஜெண்டால் ஏமாற்றப்பட்டு தங்களின் பிள்ளைகள் உயர் கல்வியைத் தொடர முடியாமல் போனதாகக் கூறினர்.

பாதிக்கப்பட்ட மாணவர்களில் ஒருவரான நாகநந்தினியின் பெற்றோர் கூறுகையில் ஆரம்பத்தில் அப்பல்கலைக்கழகத்தில் ரிம 1 இலட்சத்து 65 ஆயிரம் வெள்ளியில் மருத்துவத்துறையில் உயர்கல்வியைப் பயிலலாம் என ஏஜெண்டு நிறுவனம் கூறியது.

ஆனால், உண்மையில் ரிம 2 இலட்சத்து 65 ஆயிரம் வெள்ளி செலவில் மட்டுமே அத்துறையில் மருத்துவக்கல்வி வழங்கப்படுவதாக அப்பல்கலைக் கழகத்தின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கடந்தாண்டு செப்டம்பரில் அப்பல்கலைக்கழகத்தில் சேர்ந்த எங்களின் பிள்ளைகள் தற்போது இரண்டாம் தவணையையும் முடித்து விட்டனர்.



தனது பெற்றோருடன் நாகநந்தினி



தனது தாயார் சுந்தரியுடன் பத்மசுந்தரி

தொடக்கமாக, ஏஜெண்ட் பேச்சை நம்பி முதல் தவணைக்கான கட்டணத்தையும் இதர செலவுகளையும் சேர்த்து ரிம 80,500 வெள்ளியைச் செலுத்தினோம்.

ஏஜேண்ட் தெரிவித்த கணக்கின்படி இரண்டாம் தவணையிலிருந்து இறுதி தவணை வரைக்கும் ரிம 11,000 வெள்ளி மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

ஆனால், இரண்டாம் தவணையில் ரிம 21,000 வெள்ளியைச் செலுத்த வேண்டும். இல்லையென்றால் எங்களின் பிள்ளைகள் தேர்வை எழுத முடியாது என சுமத்ரா உத்தாரா பல்கலைக்கழகம் தெரிவித்தது.

இது குறித்து, ஏஜெண்டிடம் கேட்டபொழுது அப்பல்கலைக்கழகம் திடீரென ஏன் மருத்துவத் துறைக் கல்விக்கான தொகையை அதிகரித்தது? என்பது தங்களுக்கு தெரியவில்லை.

நீங்கள் கூடுதலாக கட்டணத்தை செலுத்த வேண்டாம். உங்களின் பிள்ளைகள் தேர்வு எழுதுவதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம் என கூறினர்.

ஆனால், அப்பல்கலைக்கழகம் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் நாங்கள் கூடுதல் கட்டணத்தைச் செலுத்தினோம்.

மேலும், அப்பலைக்கழகத்தில் விசாரித்து பார்த்ததில் சமபந்தப்பட்ட ஏஜெண்ட் நேரடியாக அப்பல்கலைக் கழகத்தில் எங்களின் பிள்ளைகளைப் பதியாமல் பினாங்கு, கெப்பாளா பத்தாஸிலுள்ள ஏலியன்ஸ் பல்கலைக் கழகம் வாயிலாக பதிந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.



தனது பெற்றோருடன் சஞ்சனா



தனது தந்தை முனியாண்டியுடன் சீலன்

எங்களின் பிள்ளைகள் இந்தோ னேசியாவிலுள்ள அப்பல்கலைக் கழகத்தில் மூன்று வருட கல்வியை முடித்த பிறகு இப்பல்கலைக் கழகத்தில் இரண்டாண்டுகள் பயில வேண்டும்.

ஆனால், ஏலியன்ஸ் பல்கலைக் கழகம் முடக்கப்படுகின்ற நிலையில் உள்ளதால் எங்களின் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

எங்களிடம் இருந்த முழுப் பணத்தையும் இதுவரையில் பிள்ளைகளின் படிப்பிற்காக செலவழித்துவிட்டோம். சுமத்ரா உத்தாரா பல்கலைக்கழகம் கூறுகின்ற தொகையை செலுத்தும் வசதி எங்களிடம் இல்லை.

ஆகையால், ஏஜெண்ட் ஆரம்பத்தில் கூறிய தொகையில் எங்களின் பிள்ளைகள் மண்டிரி எனப்படும் 5 வருட படிப்பை அப்பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

இல்லையென்றால், நாங்கள் செலுத்திய தொகையை திரும்ப ஒப்படைக்க வேண்டும். அதைக் கொண்டு எங்களின் பிள்ளைகளை இங்கேயே படிக்க வைத்துக் கொள்கிறோம். இது குறித்து சம்பந்தப்பட்ட ஏஜேண்டுக்கு எதிராக போலீஸில் புகார் அளித்துள்ளோம்.

மிட்வேலியில் கடந்தாண்டு நடைபெற்ற கல்வி கண்காட்சியில் தான் அந்த எஜெண்டின் அறிமுகம் எங்களுக்கு கிடைத்தது.

குறைந்த செலவு என்பதால் ஏஜெண்டின் பேச்சை நம்பி எங்களின் பிள்ளைகளை அங்கு அனுப்பினோம். ஆனால், இப்படியொரு நிலை உருவாகும் என நாங்கள் நினைத்தும் பார்க்கவில்லை என மிகுந்த மன வேதனையுடன் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட பெற்றோர்களுக்கு ஆதரவாக லாபிஸ் வட்டாரத்தின் மக்கள் கூட்டணி ஒருங்கிணைப்பாளர் எஸ்.இராமகிருஷ்ணனும் கலந்து கொண்டார்.

Powered by: iSENTIA